பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

சிறந்த முறையில் மங்கள வைபவங்களை வீடியோ படம் பிடிக்க
லக்ஷி வீடியோ மூவி
Luxey Video Movie
80, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

STEREO முறையில் பாடல் பதிவு செய்து கொள்ள
லக்ஷி வீடியோ மூவி
Luxey Video Movie
80, கனகரத்தினம் வீதி. அரியாலை, யாழ்ப்பாணம்.
(6287)

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆவணி மீ 23 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 25 ( 08 - 09 - 1988 ) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 178

## இங்கே பெயர்களைப் பதியலாம்

யாழ்ப்பாணம். செப்.8

பூஸா முகாமில் உள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிட விரும்பும் பெற்றோர் இன்று முதல் 148,முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் தமது பெயர்களைப்பதிவு செய்ய முடியும். (ஒ-2)

## கொழும்பில் கடைகள் மூடப்பட்டன

கொழும்பு, செப்.8

நேற்றுக் கொழும்பில் கடைகள் பூட்டப்பட்டன.

வாகன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

சட்டத்தரணி லியனைராச்சிக்கு மரணம் ஏற்பட்டவிதம் குறித்து ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக இவை இடம் பெற்றன என்று அறிவிக்கப்படுகின்றது. (ஒ-உ-எ)

## ராஜீவ் திலகரத்ன சந்திப்பு

புதுடில்லி,செப்.8

இலங்கைத்தூதர்பெர்னட் திலகரத்தின நேற்று இந்தியப்பிரதமர்ராஜீவ் காந்தியைச் சந்தித்தார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தம், மற்றும் பரஸ்பர உறவுகள் பற்றிப் பேசியதாகத் திரு.பெர்னட் திலகரத்தின பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஒ-எ)

## காலை நேரத் தேடுதல்

யாழ்ப்பாணம் செப் 8

கல்வியங்காடு, நாயன்மார்கட்டு முத்திரைச் சந்தை ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகளில் நேற்று அதிகாலை அமைதிப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது தலையாட்டி முன் சாட்டப்பட்டவர்களில் சிலர் படையினால் அழைத்துச் செல்லப்பட்டனர். (ஒ-10)

ஆரம்ப ஆசிரியர்:

## விவரம் இன்று அமைச்சுக்கு அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் செப் 8

கடந்த செவ்வாயுடன் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆரம்ப ஆசிரியர்களின் விவரம் இன்று கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

இந்தத்தகவலை நேற்று நடைபெற்ற கல்வி அதிகாரிகளுக்கான கூட்டத்தில் வைத்து யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் தற்பொழுது பயிற்சியை முடித்த ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரும் தாம் விண்ணப்பித்த கிராம சேவகர்

(6ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் பிரச்சினை:

# சுயாட்சி அமைப்பு முறையே நிரந்தரத் தீர்வாக முடியும்

## முன்னாள் நிதிமந்திரி ரொனி இப்போது சொல்கிறார் பேட்டியில்

யாழ்ப்பாணம், செப்டம்பர் 8

**இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று நிரந்தரமாகக் காணப்பட வேண்டும். தமிழர்களைத் திருப்தி செய்கின்ற அளவு உண்மையான அதிகார பரவலாக்கல் கொண்ட சுயாட்சி அமைப்பு முறை ஒன்றே இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய முடியும்.**

இவ்வாறு முன்னாள் நிதி மந்திரி திரு. ரொனி டி மெல் இப்போது பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

'ரைம்ஸ்ஒவ் இந்தியா' பத்திரிகையின் விசேட செய்தியாளர் சிமா குஹாவுக்குத்திரு.ரொனி டி மெல் பேட்டி அளித்திருந்தார். அந்தப் பேட்டியில் ஈழத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாகவும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

**பிரபாவுடன் பேசவும் தயார்**

அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கைத் தமிழர்களின் நியாயமான அச்சத்தைப் போக்க நிச்சயமாக வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டாக வேண்டும். அமைதியற்றுக் கிடக்கும் வடக்குக் கிழக்கில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த நான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசவும் தயார்.

தமிழ் மக்களுடைய பிரச்சினையை 1977 இலேயே தீர்த்து வைத்திருக்க முடியும், அதிப் பெரும்பான்மை ஆதரவுடன் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றம் வந்தது அவர்கள் மிதவாதத் தன்மையுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. 'பட்டியலில்' அமிரின் பெயரும்!

கொழும்பு, செப் 8

மக்கள் விடுதலை முன்னணி தயாரித்து வைத்திருக்கின்ற தாக்கப்பட வேண்டியவர்கள், பட்டியலில் (Hit Squad) தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ.அமிர் தலிங்கத்தின் பெயரும் இருப்பதாக இரகசியப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவு அறிவித்திருக்கிறது.

இத் தகவலை திரு. அமிர்தலிங்கமே கொழும்புச் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

இலங்கையில் எங்கு தங்குவது என்பதே எனக்குப் பிரச்சினையாக உள்ளது.

கொழும்பு வந்திறங்கியதும் புலனாய்வுப் பொலீஸார் என்னைச் சந்தித்து ஜே. வி பி யின் லிஸ்டில் எனது பெயரும் உண்டு என்று சொன்னார்கள்.

கொழும்பில் நாம் தங்குவதற்கு வீடு வாடகைக்குத் தரவே

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



தெற்கிலேயும் இப்ப பகிஷ்கரிப்பு, கடையடைப்பு எல்லாம் சர்வசாதாரணமாகிவிட்டுது ......பாத்தியளே!

## குண்டுவெடிப்பு

நேற்றுக் களுத்துறைக்கு அருகே மக்கோனை என்னுமிடத்தில் குண்டு வெடிப்புச்சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஏற்பட்டசேதங்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. (ஒ-எ)

## வடக்கு, கிழக்கில் கௌரவத்துக்காக தேர்தல் நடத்தக் கூடாது

### பத்திரிகையாளர் மாநாட்டில் ரெலோ தலைவர் செல்வம்

வவுனியா, செப் 8

''இலங்கை - இந்திய அரசுகள் தமது கௌரவத்துக்காக வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்தக் கூடாது. தேர்தல் நடத்துவதற்கு முன்னர் இப்பகுதிகளில் அமைதியான ஒரு சூழ்நிலையை முதலில் ஏற்படுத்த விடுதலைப் புலிகள் உட்பட முத்தரப்பினரும் முன்வரவேண்டும்''.

இவ்வாறு ரெலோ இயக்கத்தலைவர் செல்வம் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் நடத்தப்படவுள்ள உத்தேச மாகாண சபைத் தேர்தல், இந்தியப்படையுடனான உறவு நிலை, ஏனைய போட்டி இயக்கங்களுடனான உறவு நிலை, என்பன குறித்து அவரிடம் வினவப்பட்டது.

அவர் மேலும்தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இப்போதுள்ள சூழ்நிலையில் தேர்தல் நடைபெறுமானால் இரத்தக்களரியே ஏற்படும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க முடியாத நிலையே நிலவுகின்றது.

எனவே, இந்தநிலையில் வடக்கு, கிழக்குப்பகுதிகளில அமைதிநிலையை ஏற்

(6ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு நிலைமை:

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகம் தடுக்கப்பட்டதாக ஈரோஸ் கண்டனம்

யாழ்ப்பாணம். செப் 8

முல்லைத்தீவுப் பகுதி மக்களின் அவலம் குறித்தும், பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களுக்கு உணவு விநியோகம் தடைசெய்யப்பட்டுள்ளது குறித்தும் ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

கடந்த 21-08-88மாலை நான்குமணி தொடக்கம் இன்றுவரை அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்குச்சட்டத்தாலும் இந்திய அமைதிப்படையினரின் செக்மேற்-3 தேடுதலாலும் இப்பகுதி மக்கள் சொல்லொணா துன்பத்தை அனுபவித்து வருகிறார்கள்.

சகல விதமான நிர்வாகங்களும் ஸ்தம்பித்த நிலையிலும் உணவு விநியோகம் குறிப்பாக முள்ளியவளை, தண்ணீரூற்றுப்பகுதிகளில் முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையிலும் இப்பகுதிமக்களுக்காக ப நோ கூ சங்கத்தினாலும், சமூக சேவை அமைப்புக்களாலும் அனுப்பப்பட்ட உணவு லொறிகள் முல்லைத்தீவில் இந்தியப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. செஞ்சிலுவைச் சங்க உணவு விநியோகம் கூட அனுமதிக்கப்படவில்லை.

நெல் அறுவடை முற்றாக தடுக்கப்பட்டு சிறு

(6ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனின் நினைவுதினம் 24இல்

### ஊரெழுவில் மணிமண்டபம்

யாழ்ப்பாணம், செப். 8

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த தியாகி திலீபனின் முதலாவது ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 24 ஆம்திகதிசனிக்கிழமை ஊரெழுவில் அனுஷ்டிக்கப்படும்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் ஊரெழு பிரசைகள் குழுவினரும், பொதுமக்களும், பெற்றோரும் மேற்கொண்டுள்ளனர்,

அன்றைய தினம் தியாகி திலீபனின் ஆத்ம சாந்தியின் பொருட்டு ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும். மனோன்மணி அம்பாள் ஆலயத்திலும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அன்னதானமும் வழங்கப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

08 - 09 - 88
ஆவணி - 23
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.33முதல் 09.03வரை
ராகுகாலம்:
01.33முதல் 03.03வரை

### நாளை மூவர்ணச் சிறப்பிதழ்

நல்லூர்க்கந்தன் ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாளைய உதயனுடன் ஆறுபக்க மூவர்ணச் சிறப்பிதழ் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும்.

**நாளைய உதயன் மொத்தம் 12 பக்கங்கள்.**

**விலை 2ரூபா மட்டுமே**

இன்றே உங்கள் பிரதிகளுக்கு பதிவு செய்து கொள்ளுங்கள்.

## பண்டத்தரிப்பில் படையினர் மீது சூடு

### ஜவான்கள் இருவர் பலி

யாழ்ப்பாணம், செப். 8

பண்டத்தரிப்புச் சந்தையில் துணிவகைகள் வாங்கிக்கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு ஜவான்கள் மரணமடைந்தனர்.

புடைவைக்கடை உரிமையாளரும் இச்சம்பவத்தில் காயமடைந்தார்.

நேற்றுப் பகல் 12மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து பண்டத்தரிப்புப் பகுதி எங்கும் மயான அமைதி நிலவியது.

இதேவேளை கடை உரிமையாளர் சின்னத்துரை இராசலிங்கம் (வயது 33) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது தோள்மூட்டுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

சூட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் இருந்த ஏனைய

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் பல பகுதிகளிலும் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, செப் 8

நேற்று நாட்டின் பல பகுதிகளில் நீதிமன்றங்களைச் சட்டத்தரணிகள் பகிஷ்கரித்தனர்.

சட்டத்தரணிகள் சங்கம் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்தே இப் பகிஷ்கரிப்பு இடம் பெற்றது.

சட்டத்தரணி விஜேதாஸ லியனாராச்சி பொலீஸ் காவலில் இருந்த போது உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்தே இப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு சட்டத்தரணிகள் சங்கம் அழை

(6ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் ரயில்கள் ஓடவில்லை

கொழும்பு செப்.8

தென் இலங்கையில் நேற்று பஸ், கார், ரயில்கள் ஓடவில்லை.

கடைஅடைப்பும்நடந்தது.

சட்டத்தரணி விஜேதாஸலியனாராச்சி மரணமான சூழ்நிலையைக்கண்டித்தும், ஆட்சேபித்தும் இந்தப் பகிஷ்கரிப்பும், கடையடைப்பும் இடம் பெற்றன.

(ஒ-எ)

## பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 8

சமீபத்தில் அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ். மாவட்டத்தில் தற்பொழுது குடியேறியுள்ளவர்கள் தங்கள் பெயர்களை வடக்கு - கிழக்கு பிரசைகள் குழுவின் இணைப்புக் குழுவிடம் பதிவு செய்துகொள்ளலாம்.

பொதுஸ்தாபனங்கள் மூலம் நிவாரணப் பணிகளைமேற்கொள்வதற்காகவே யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெரு. 148 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## 3 மணி நேர வீதித்தடை!

மாங்குளம் செப் 8

மாங்குளத்திலிருந்து புளியங்குளம் வரையிலான போக்குவரத்து நேற்றுக் காலை 8 மணி முதல் 11 மணி வரை தடை செய்யப்பட்டது.

இவ்வீதியால் எவரும் நடந்து செல்லவோ சைக்கிளில் மற்றும் வாகனங்களில்செல்வதற்கோ அனுமதிக்கப்படவில்லை.

இந்த இடைப்பட்ட நேரத்தில் இரு ஹெலிக்கொப்டர் மூலம் வந்த உயர் அதிகாரிகள் மாங்குளம் இராணுவ முகாமில் அவசர கூட்டமொன்றை நடத்தியதனால் அதற்குப் பாதுகாப்பிற்காகவே இத்தடை ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

முல்லைத்தீவு வீதியாலும் பாதசாரிகளை கூடசெல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. (ஒ-9)

## அகதிகள் அடையாளக் கார்ட்

யாழ்ப்பாணம், செப். 8

இந்தியாவிலிருந்து ஜூலை 9 ஆம் திகதியும் ஆகஸ்ட் 27 ஆம்திகதியும் தாயகம் திரும்பிய அகதிகளுக்கு நடந்த மூன்றும் திகதி அடையாளக்கார்டுகள் வழங்கப்பட்டன.

இந்தக் திகதியில் அடையாள கார்ட்டுகளைப் பெறத் தவறியவர்கள் நாளை மறுதினம் 10 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ். இந்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

வலம்புரிச்சங்கு விற்பனைக்கு உண்டு. நேரில் வருக:- வடிவேலு 341 நாவலர் வீதி, யல்லுடியூட்டரி, கைலாச பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (6169)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில், தேக்கு அலுமாரி, கண்ணாடி மேசை, Show-Case, சாப்பாட்டு மேசை, பித்தளைப் பொருள்கள், ஹோல் செற், விருந்தைக் கதிரைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326. பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்தியருகில்,) (6170)

Broiler (புரேயிலர்) கோழிகள், முட்டைகள் தொகையாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். - அண்ணுபாம், இணுவில். (C/ 128)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இணுவில் வீதியில் (பிரதான வீதியிலிருந்து 100யார் தூரத்தில்) 3 பரப்புக்காணி பயிர்களுடன் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: இ கமலநாதன், சட்டத்தரணி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (6161)

சித்தங்கேணிச் சந்தியிலிருந்து நூறுமீற்றர் தூரத்தில் சங்கக் கடைக்கு அருகாமையில் ரேட்டு முகப்புடைய மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: அ. கருணாகரர், 8, வைமன் வீதி, நல்லூர். (6360)

## தேவை

விரைவில் ஆரம்பிக்க இருக்கும் லேடீஸ் கார்மென்ற் இன்டஸ்றீஸுக்கு கைதேர்ந்த கட்டரும், பெண் தையலர்களும் தேவை. மானிப்பாய் பகுதியினருக்கு முன்னுரிமை தரப்படும். விண்ணப்பிக்கவும். 'ஜெகபதி காம் ரெக்ஸ்' மானிப்பாய். (6154)

சண்டிலிப்பாயில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் வேலை, தெரிந்த பெண்பிள்ளைகளும், பூ வேலையில் அனுபவமுள்ள பெண்களும் உடன் தேவை, தொடர்பு சு. வெங்கடேஸன், C/o கு விஜேதன் 'அகில் காமன்ஸ்' உத்தமிஇல்லம், கல்வளை சண்டிலிப்பாய், (6247)

ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்த காசாளர் தேவை. றேடியோ, ரி. வி திருத்துவதில் அனுபவம் உள்ளவர் தேவை. 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6359)

லேடன்தொழிற்சாலைக்கு நெசவு யந்திரம் ஓட்டும் தொழிற்பயிலுனர் தேவை. கல்வித்தராதரம்: ஒன்பதாம் ஆண்டு முடித்திருக்கும் 16 வயது முதல் 25 வயது வரையுள்ளவர்கள் நேரே இல-7 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொழிற்சாலையில் 13-9-88க்கு முன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளவும். (6361)

எந்திரவியலாளர் ஒருவரின் குடும்பத்துக்கு யாழ்- மாநகர எல்லைக்குள் அல்லது அண்மிய பகுதியில் குறைந்தது 3 அறைகள் கொண்ட சகல வசதிகளும் பொருந்திய வீடொன்று வாடகைக்குத் தேவை. தொடர்பு: 189 C/O உதயன். (6168)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி. நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சிநெறி புதிய வகுப்பு 10. 9. 1988 சனி மு. ப. 9. 00மணிக்கு ஆரம்பமாகின்றது. நேரில் வந்து கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். க. பொ. த. (சா / த) குறைந்த தகைமையாகும். பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6353)

### தவறிவிட்டது

198290165V இலக்கமுடைய திருமதி எல்சி இரத்தினம்மா இராசரத்தினம் என்பவரின் தேசிய அடையாள அட்டை 6. 9. 88 இல் பெரிய கடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Mercantile Credit Ltd, Stanley Road, காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6366)

செல்லையா நவரட்ணம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 483632797 V 04 - 09 - 88 அன்று நல்லூர் கோயிலில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது நல்லூர் கோயிலில் ஒப்படைக்கவும். அத்துடன் மோட்டார் சைக்கிள் பாஸ் உள்ளது (6147)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/109)

### சேவை

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கு (Lamination) பிளாஸ்ரிக் கவரிங்களுக்கு நாடுங்கள்: கனன் போட்டோ கொப்பிங் சேவிஸ், மணல் ஒழுங்கை, தும்பளை வீதி, பருத்தித்துறை. (6245)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் கறுப்புப் புள்ளி சேவற் குஞ்சுகளும், பேட்டுக் குஞ்சுகளும் 13-9-88 இலும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். பதிவு செய்தவர்கட்கும் பதிவு செய்யாத தூர இடத்திலிருந்து வருபவர்கட்கும் முதலிடம் கொடுக்கப்படும். N. கணபதிப்பிள்ளை டச்ரேட், சாவகச்சேரி, (6364)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (C108)

## சேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு காயவைத்த சியாக்காய், மருந்துச்சரக்குகள், இலுப்பைப்பருப்புஅரைப்பதற்கும்தேங்காயெண்ணெய் ஊற்றுவதற்கும் நெல் உடைப்பதற்கும். ஈஸ்வரி மில்ஸ், (நல்லூர்கல்வியங்காட்டு சந்தைக்கு எதிரில்) வெள்ளிக்கிழமைகளில் மில் திறக்கப்பட மாட்டாது. (6165)

81/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி 'மாங்கல்யா' திருமண சேவை பிரதம ஸ்தாபகரும், பங்காளியுமான நான் எனது இல்லத்தை ஆனைப்பந்தியில் இருந்து 14 விதானையார் ஒழுங்கை கொழும்புத்துறை மேற்குக்கு மாற்றியுள்ளேன். என்னுடன் நேரடியான தொடர்பு உடையவர்கள் புதிய விலாசத்திலும் தொடர்பு கொள்ளலாம் திருவிளங்ம் (6352)

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N P லோகேஸ்வரன், No. 33 மூத்த விநயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

---

## ஈராண்டு நினைவஞ்சலி

**திரு. வ. தம்பிராசா**

(இளைப்பாறிய ஆசிரியர் வீமன்காமம் ம. வித்தியாலயம்)

**தோற்றம்:** 30 - 10 - 1920 **மறைவு:** 01 - 09 - 1986

அன்பும். பண்பும் நிறைந்து எங்கள் குடும்ப விளக்காய் ஒளிபரப்பி அணைந்த எம் அன்புத் தந்தைக்கு ஈராண்டுகள் கடந்தாலும் அவர் செய்த கடமைகள் பணிகள் எம் நெஞ்சை விட்டகலாது அவரது ஆத்மா சாந்தியடைய மாவைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமகள்.**

இலகடி,
மாவிட்டபுரம். (6171)

---

J. M. J

**உங்கள் பயண அமைப்பாளர்**

# S. P. ANTON

மகிழ்ச்சியுடன் வழங்கும்

# வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

செல்வம் கொழிக்கும்

**குவைத் நாட்டில்**

**ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக**

**CLEANERS**

ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?

## இதோ ஓர் அரிய வாய்ப்பு!

கடவுச்சீட்டு இல்லாதவர்களுக்கு அதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்து அடுத்த பத்து நாட்களுக்குள் பயணம் செய்வதற்கான **உடனடிப் பயண ஒழுங்குகளைச் செய்து கொடுக்கிறோம்.**

**சம்பளம்: 35—40 குவைத் டினார்கள் உணவு, உறைவிடம் இலவசம்**

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

**உங்கள் பயண அமைப்பாளர்**

# S. P. அன்ரன்

**No. 648½ ஆஸ்பத்திரி வீதி,**
காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக
**யாழ்ப்பாணம்.**

(C/132)

---

**யாழ்ப்பாணம்**
**பல. நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**வரையறுக்கப்பட்டது**

# பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமையுடைய ஆண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் 21- 9-88 ஆம் திகதிக்கு முன்னர் சங்க பொதுமுகாமையாளருக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் ' களஞ்சிய முகாமையாளருக்கான பதவி விண்ணப்பம்' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**பதவி-** களஞ்சிய முகாமையாளர் (சில்லறை விற்பனை நிலைய முகாமையாளர்)

**பதவி இல- 208- 14**

**சம்பள அளவுத் திட்டம்**

195 — 345
10 X 10 — 12.50 × 4 இத்துடன் சங்கத்தால் வழங்கப்பட்டு வரும் விஷேட படிகள் ரூபா 819 /- ம் சேர்த்து வழங்கப் படும்.

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தராதரப் பத்திரம் / க. பொ. த. சாதாரண தரத்தில் 2 அமைவுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தகஎண்கணிதம்/ தூயகணிதம் சிங்கள / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தி.

**வயது எல்லை:20 — 30**

**பிணை -** ரொக்கம் 5000/- ஆதனப் பிணை 10, 000/-

**குறிப்பு:** சங்கத்தில் சேவையிலுள்ளோருக்கும் சங்க எல்லைப் பரப்பிலுள்ளோர்க்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**பொது முகாமையாளர்**

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
7- 9- 1988 (C/135)

---

**பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.**

# கேள்வி அறிவித்தல்

**ஆசிரிய அபிவிருத்தி வங்கி — கல்விப்புனருத்தாபன திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குத் தேவையான உருக்கு, மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்தல்.**

01. கீழ்க் காணப்படும் உருக்குத் தளபாடங்களும். மரத் தளபாடங்களும் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்குத் தேவைப்படுகின்றன. இவை விநியோகிக்கக்கூடிய பாடசாலைகளின் பெயர்கள் மேற்படி திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்குத் தளபாடம் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான முத்திரையிடப்பட்ட கேள்விகளை உருக்கிலான/ மரத்திலான பாடசாலைத் தளபாடத்தை வழங்குபவர்களிடமிருந்து / உற்பத்தி செய்பவர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பிரதேசக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர் 1988 செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை 10-30 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.
02. 1 மாணவர் உருக்கு மேசைகள் 2. மாணவர் உருக்குக்கதிரைகள்
    3. பாலர் உருக்கு மேசைகள் 4. பாலர் உருக்குக் கதிரைகள்
    5. தாங்கிகளுடன் கூடிய கரும்பலகைகள்.
    6. 2 லாச்சிகளுடன் கூடிய அதிபர் மேசைகள்
    7. ஒரு லாச்சி ஆசிரியர் மேசைகள்
    8. ஆசிரியர் கைப்பிடிக் கதிரைகள்.
03. விதித்துரைக்கப் பெற்ற படிவங்களில் இணைப்பிரதிகளிற் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்து, கேள்விப் பத்திரங்களை இட்டனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல்மூலையில் ''பாடசாலைத் தளபாடத்திற்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப்பெற்று இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் முடிவு நேரத்திற்கு முன்னர் இடப்படுதல் வேண்டும். அல்லது முடிவு நேரத்துக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். முடிவு நேரம் முடிந்ததும் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமாயிருக்கலாம்.
04. கேள்விப் படிவங்கள், கேள்வி நிபந்தனைகள், மாதிரிப்படங்கள். விபரக்கூற்றுக்கள் என்பனவற்றை மீளளிக்கப்பெறாத கட்டணமாகிய 100/- ரூபாவையும், மீளளிக்கத்தகு கட்டணமாகிய 500/- ரூபாவையும் செலுத்துவதன் பேரில் 1988 செப்ரெம்பர் 22 ஆம் திகதியன்று பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வெற்றிவேலு சபாநாயகம்.**
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/54)

---

# கேள்வி அறிவித்தல்

**பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்,**

**ஆசிரிய அபிவிருத்தி - வங்கி**
**கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின்கீழ்**

## யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கட்டிட வேலைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தால் 1988 செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி (28 - 09 - 88) முற்பகல் 10 . 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும். ஒவ்வொரு வேலைகளுக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம். கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம். கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1988 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிவரை (21 - 09 - 88) மீளளிக்கப்படாதகேள்விப்பத்திரப்பணமாக ரூபாஐம்பதும் (ரூ. 50/-). மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ. 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1988 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி (28 - 09 - 88) காலை 10 . 30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்.
யாழ்ப்பாணம். 1988 09 - 06

**வெற்றிவேலு சபாநாயகம்,**
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

| | பாடசாலையின் பெயர். | வேலைவிபரம். | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை. |
|---|---|---|---|
| 1. | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை யாழ்ப்பாணம். | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 300, 000/- |
| 2. | யா/ அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 150, 000/- |
| 3. | யா/ வல்வெட்டி இ. ம. வி., வல்வெட்டித்துறை, | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 100, 000/- |
| 4. | யா/ வதிரி வடக்கு மெ. மி. த. க. பா. கரவெட்டி. | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 150, 000/- |
| 5. | யா/ பொலிகண்டி அ. மி. த. க. பா., பொலிகண்டி. | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 100, 000/- |
| 6. | யா/ திக்கம் சித்தி விநாயகர் வித்தியாசாலை. பொலிகண்டி. | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 50, 000/- |
| 7. | யா/ சாந்தமேரி பெண்கள் பாடசாலை, ஊர்காவற்றுறை. | கட்டிட புனருத்தாபன வேலை. | ரூ. 100, 000/- |
| 8. | யா/ சாந்தரேக்ரே. க. த. க. பாடசாலை, யாழ்ப்பாணம். | கட்டிட புனருத்தாபனவேலை. | ரூ. 75, 000/- |

(C53)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கல்வி மாவட்டத்தில்

# தளபாடக் கொள்வனவுக்கு ரூபா 50 லட்சம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

பலாலி, செப். 8

யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தில் தளபாடப் பற்றுக்குறையைத் தீர்க்குமுகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் நிதியில் இருந்து 50 லட்சம் ரூபாவை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளால் வடமராட்சி, காங்கேசன்துறை, பலாலி தெல்லிப்பழைப்பகுதிப்பாடசாலைகளில் உள்ள தளபாடங்கள் முற்றுகச் சேதமடைந்திருந்தன.

இந்திய அமைதிப் படையின் இராணுவ நடவடிக்கைகளால் குடாநாட்டின் ஏனைய பல பாடசாலைகளின் தளபாடங்கள் அழிந்தும், சேதமடைந்தும், களவுபோயும் இருந்தன.

பலபாடசாலைகள் தளபாடப் பற்றுக்குறையை இன்றும் அனுபவித்து வருகின்றன.

இப் பற்றுக்குறைகளை நீக்க யாழ். கல்வித்திணைகளத்தின் மேற்பார்வையில் கேள்விகள் கோரப்பட்டு செய்து முடிக்கப்பட்ட தளபாடங்கள் தற்போது பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் அமைச்சினுல் வடபகுதிக்கென பல தளபாடங்கள் வழங்கப்பட்டன.

இவற்றுக்கு மேலாக இவ்வருட இறுதிக்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய 50 லட்சம் ரூபா பெறுமதியான உருக்கிலான கதிரை, மேசை, கரும்பலகைகள், அலுமாரிகள் என்பவற்றுக்கான கேள்விப்பத்திரங்களை யாழ். கல்வித் திணைக்களம் கோரவுள்ளது.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் அவர்களின் தீவிர முயற்சியால் இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது

(இ-119)

# யார் எதிர்த்தாலும் தமிழினம் கௌரவத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்காது

## திறப்பு விழாவில் ஆணையாளர் பேச்சு

யாழ்ப்பாணம், செப் 8

தமிழினம் எந்தக் காரணத்தாலும், யார் எதிர்த்தாலும் சுயகௌரவத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டாது.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் திங்களன்றுநடைபெற்ற யாழ். மாவட்ட மினிசினிமா சங்கக் காரியாலயத் திறப்பு விழாவில் உரையாற்றும்போது கூறினுர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

தற்போதைய அசம்பாவித சூழ்நிலைகளால் அனைவரும், அனைவரையும் புரிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தியா-இலங்கை, நாம் அனைவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டுள்ளோம்.

தமிழர்கள் எப்போதும் ஆளப்பட மாட்டார்கள்—அப்படி ஆளப்பட நேர்ந்தால் அவர்கள் வீரர்களாகவே இருப்பார்கள் – என்று கூறினுர்.

ஆணையாளர் தமது பேச்சின்போது பூஸா கைதிகளின் குடும்பங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் சொன்னதாவது:—

பொதுஸ்தாபனங்கள் தவிர ஏனைய அமைப்புகள், சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் என்பனவும் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் குடும்பங்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

அவ்வாறு உதவ முன்வரும் பட்சத்தில் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டால் நான் அவர்களுக்கான தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பேன் – என்றுர்.

(ஒ-9)


# பிரயாண ஒழுங்குகள்

## குவைத் நாட்டிற்கு

கூலியாட்கள், பணிப்பெண்கள் உடனடியாகத் தேவை. முற்பணம் அறவிடப்பட மாட்டாது. பாஸ்போட்டும் செய்து கொடுக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: **வி. க. கனகேந்திரன்,**
றெயில் ரோட் (நந்தாவில் அம்மன் கோயிலடி) கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(6319)



# பிரயாண ஒழுங்குகள்

## சவூதியில் வேலைவாய்ப்பு

1. ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
2. யூனிவசிற்றி கிளீனேர்ஸ்
3. மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்
4. எலெக்ரீஷியன்ஸ்
5. மெக்கானிக்
6. குழாய் வேலை செய்பவர்
7. மேசன்
8. தச்சுவேலை செய்பவர்
9. றைவேர்ஸ் (Drivers)
10. எலக்ரோனிக் மெக்கானிக்
11. ரெலிபோன் டெக்னீசியன்ஸ்

**முற்பணம் அறவிடப்படமாட்டாது**

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

# கோல்டன்

## ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரதநிலைய வீதி,
சுன்னுகம்.

கிளை 1. குப்பிளான்
கிளை 2. வன்னிச்சி கோவிலடி.

(C/49)


## சட்டத்தரணியின் உடலில் நூறு உட்காயங்கள்

பொலீஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் உயிரிழந்த கொழும்புச் சட்டத்தரணி விஜேதாஸ லியனுராச்சியின் உடலில் 100க்குமேற்பட்ட உட்காயங்கள் இருந்தன.

பிரேத பரிசோதனை அறிக்கையில் இவ்விபரம் வெளியானது.

மழுங்கிய ஆயுதம் ஒன்றினுல் தலை, தசைநார்களில் பலமாகத் தாக்கப்பட்டதனுல் இக்காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சட்டத்தரணி விஜேதாஸ லியனுராச்சியின் மரணம்சம்பந்தமாக மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று நேற்று நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனுதிபதி ஜெயவர்த்தனு கூறினுர். (ஒ-எ)

பழைய நிலைமை மாறி

# ஆசிரியர்கள் இன்று கௌரவஊழியராகக் கணிப்பு

## கல்விப் பணிப்பாளர் பேச்சு

யாழ்ப்பாணம், செப்.8

முன்பு ஆசிரியர்கள் என்றுல் வாத்தியார் என்றும், உபாத்தியாயர் என்றும் கேலி செய்யும் காலம் இருந்தது. ஆனுல் தற்பொழுது இந்தநிலைமாறி ஆசிரியர்கள் அதிக சம்பளம் பெறும் ஒரு கௌரவம் மிக்க அரச ஊழியர்களாகக் கணிக்கப்படுகிருர்கள். இவர்களின் இந்தப்பட்டியலில் நீங்களும் சேர்ந்துள்ளீர்கள்.

இந்தப் பயிற்சியில் நீங்கள் பெற்ற சங்கீத, நடன, உடற்கல்வி பயிற்சிகள் உங்களைப் பல நோக்கு ஆசிரியர்களாகத் திகழவைக்கும்.

இந்தப் பயிற்சிமூலம் ஆசிரியராகும் நீங்கள் நாட்டிற்குச் சேவைசெய்யும் வருங்கால சிற்பிகளை உருவாக்கவேண்டும்.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம்செவ்வாய் ஆரம்பஆசிரியர் சேவைமுன் பயிற்சியை முடித்து வெளியேறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவைபவம் செவ்வாய் மாலை3மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இங்குவைத்து வேம்படி மகளிர்கல்லூரி, மத்தியகல்லூரி ஆகிய கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களைக் கல்விப் பணிப்பாளர் வழங்கினுர்.

சென்பற்றிக்ஸ்கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில்வைத்து பணிப்பாளர் வழங்கினுர்.;

இதேவேளையில் யாழ். இந்துமகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்சி பெற்றவர்களின் சான்றிதழ்களை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைத்து பிரதம கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் வழங்கினுர்.

யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் பயிற்சி பெற்றவர்களின் சான்றிதழ்களும் பிரதம கல்வி அதிகாரியால் இதே பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டது. (ஒ-9)

# மட்டக்களப்பைச் சேர்ந்த 12 மீனவருக்கு ஏற்பட்ட கதி

திருகோணமலை, செப் 8

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரை உ. அ. பிரிவிலுள்ள பால்சேனை என்னும் கிராமத்தைச் சேர்ந்த 12 தமிழ் மீனவர்கள் கரையோரத்தில் படகுகளில் இருந்து மீன்பிடித்துக்கொண்டிருந்த போது படையினரால் தாக்கப்பட்டு திருமலைக்குக் கொண்டு வந்து வீதியில் விடப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இவர்களின் அவல நிலையைக் கண்ட பொது மக்கள் இவர்களை அரவணைத்து உடுக்க உடையும் படுக்க இடமும் கொடுத்து உபசரித்தனர்.

இது பற்றி கூறப்படுவதாவது;

பால்சேனையைச் சேர்ந்த 12 தமிழ் மீனவர்கள் இரண்டு பைபர் கிளாஸ் படகுகளிலும் ஒரு மரப்படகுலும் கடலில் வெருகல் கரை ஓரமாக மீன்பிடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்பொழுது அங்கு படகில் வந்த படையினர் அவர்களைத் தாக்கி விட்டு படகுகளுடன் அவர்களை சீனக்குடா இறங்குதுறைக்கு கொண்டு வந்தனர்.

படகுகளைக் கட்டி விட்டு அவர்களைத் திருமலைக்குக் கொண்டுவந்து மடத்தடிச் சந்தியில் அனுதரவாக இறக்கி விட்டுச் சென்றனர்.

மடத்தடிச் சந்தியில் செய்வதறியாது தவித்து நின்றவர்களுக்கு அப்பகுதி மக்கள் அபயம் அளித்தனர்.

அடுத்த நாள் பிற்பகல் அவர்கள் ஈச்சிலம்பத்தை கிராமசேவையாளர் திரு. க. தேவகடாட்சத்தின் உதவியுடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-150)

# பெரும்பாக பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி

பண்டத்தரிப்பு செப் 8

யாழ். குடாநாட்டை சேர்ந்த 12 பெரும்பாக உத்தியோகத்தர்கள், மற்றும் சேவையில்உள்ள 150பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான சேவை காலப் பயிற்சி ஒன்றை கமநல சேவை உதவிப் பணிப்பாளர் திரு. க. பரமலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார்.

நான்கு நாட்கள் நடாத்தப்படவுள்ள இச் சேவைக் காலப் பயிற்சி இம்மாதம் 19 ஆம் திகதி தொடங்குகின்றது.

சாவகச்சேரி, கைதடி, புலோலி கமநல சேவை நிலையங்களைச் சேர்ந்த பெரும்பாக உத்தியோகத்தர்களும், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் 19 ஆம் திகதி நடைபெறும் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

20 ஆம் திகதி சேவைக் காலப் பயிற்சியில் கீரிமலை, அம்பன் கமநல சேவை நிலையப் பகுதி பெரும்பாக உத்தியோகத்தர்களும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் கலந்து கொள்கின்றனர்.

21 ஆம் திகதி நல்லூர் புங்குடுதீவு, புத்தூர், வேலணை சமநல சேவைப் பிரதேச பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் [illegible] உத்தியோகத்தர்களும் பயிற்சி பெறவுள்ளனர்.

23 ஆம் திகதி தொல்புரம், உடுவில், நீர்வேலி கமநல சேவைப் பிரிவுகளைச்சேர்ந்த பெரும்பாக உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி, யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலக கருத்தரங்கு மண்டபத்திலும் பயிற்சிப் பண்ணையிலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் திரு. என். பத்மநாதன் கமநல சேவை அலுவலக பெரும்பாக உத்தியோகத்தர் திரு சுந்தரேசன் திரு. ஹென்றி ஆகியோருடன், விவசாய விரிவாக்க திணைக்கள சிரேஷ்ட அலுவலர்களும் சேவைக்காலப்பயிற்சிக்கு உதவினர். (இ-120)

# இன்றைய கால கட்டத்தில் பிரசைகள் குழு அவசியம்

## அலுவலகத் திறப்பு விழாவில் உரை

பருத்தித்துறை, செப்8

''பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, நாகர்கோயில் ஆகிய பிரசைகள் குழுக்களின் செயற்பாடு தற்போதைய நிலையில் இப்பகுதி மக்களுக்கு மிகவும் அவசியமாகும்''

பருத்தித்துறை பிரசைகள் குழு அலுவலகத்தை மங்கள விளக்கேற்றித் திறந்துவைத்து உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் மேற்கண்டவாறு கூறினுர்.

பருத்தித்துறை நகரில் மக்கள் சந்தைக்கு மேற்குப் புறமாகவுள்ள ராஜன் சைக்கிள் நிலைய மேல் மாடியில் இப்பிரஜைகள் குழுவுக்கான அலுவலகம் அமைந்துள்ளது.

விழாவுக்குப் பருத்தித்துறைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு.செ. விசாகசுந்தரம் தலைமை வகித்தார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலும் மேலும் கூறியதாவது:-

இன்றைய நிலையிலே பிரசைகள் குழுக்கள் சிறப்பாக இயங்கவேண்டிய முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களின் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிரசைகள் குழுக்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்

இன்று சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது. பொலீஸ் நிலையங்கள், நீதிமன்றங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன. இந்நிலையிலே பொதுமக்கள் சொல்லொணுக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். மக்களின் இக்கஷ்டங்களுக்குப் பக்கபல[illegible] காண வேண்டியது பிரஜைகள் குழுக்களின் முக்கிய கடமையாகும்.

இப்படி அவர் கூறினுர்.

தலைவர் திரு. செ. விசாகசுந்தரம் தமது தலைமையுரையில் ''இன்னல்களை அனுபவித்து வரும் எமது தமிழ்மக்களுக்கு உதவுவதையே இலட்சியமாகக்கொண்டு பருத்தித்துறைப் பிரஜைகள் குழு இயங்கி வருகின்றது'' என்றுர்.

நாகர்கோவில பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் பி. வேலாயுதம் பிள்ளை பருத்தித்துறை வர்த்தகர் சங்க உபதலைவர் திரு. பீ. மகாதேவா உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்,

பிரசைகள் குழுச்செயலாளர் திரு. வ. ச. [illegible] நன்றியுரை வழங்கினுர். (இ-118)

# நித்திகைக்குளம் பகுதியில் மோதல் தணிந்தது!

ஒட்டுசுட்டான், செப்8

நித்திகைக்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையில் இடம்பெற்று வந்த மோதல் தற்பொழுது சற்றுத் தணிந்துள்ளதாக இங்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் ஷெல் தாக்குதலும் வெகுவாகக் குறைந்துள்ளதாம்

இரண்டு மணிநேரம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதனுல் ஒருசில மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னுெரிடத்திற்கு போக்குவரத்து செய்கின்றனர்.

முலைத்தீவு நகரில் வசிப்பவர்கள் கடற்கரை வழியாக புதுக்குடியிருப்புக்குச் சென்று பஸ் ஏறுகின்றுர்கள்.

தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதியில் உள்ளவர்கள் கேப்பாபுலவு என்ற கிராமம் வந்து அங்கிருந்து காட்டுப் பாதையால் புதுக்குடியிருப்புக்கும், ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு மக்கள் சாளம்பன் கிராமம் வழியாக மாங்குளம் சென்று பஸ் ஏறுகின்றனர்.

(ஒ-113)

ஆதரவு தெரிவித்தவர்களுக்கு

# பூஸா கைதிகளின் நன்றி

பூஸாவிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது உண்ணு விரதப் போராட்டத்தை கடந்த மூன்றும் திகதி சனிக்கிழமை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தனர்.

'மேர்ஜ்' நிறுவனத்தின் பிரதிநிதிகள் மேற்படி கைதிகளை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே அவர்கள் தமது உண்ணு விரதப் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.

பூஸாவிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணு விரதப் போராட்டம் ஒன்றை சட்டம் கட்டமாக ஆரம்பித்தனர் என்பது தெரிந்ததே.

தமது உண்ணு விரதப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு தந்த நிர்வாகத்தினருக்கும் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கும், தம்மைவந்து பார்வையிட்ட சகல தரப்பினருக்கும் பூஸா கைதிகள் நன்றி தெரிவித்துள்ளனர். அவர்கள் இது சம்பந்தமாக ஓர் அறிக்கையையும் வெளியிட்டனர்.

அத்துடன் தமது போராட்டத்துக்கு ஆதரவாக உண்ணுவிரதப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் விசேஷ நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

தமக்கு ஆதரவாக வெளியில் நடத்தப்பட்டுவரும் உண்ணுவிரதப் போராட்டங்களை தற்காலிகமாக நிறுத்துமாறும் பூஸா கைதிகள் அந்த அறிக்கையில் கேட்டுக்கொள்கின்றனர். (ஒ-ஐ)

# சமயத்துக்காகப் போராட வேண்டிய காலத்தில் வெளிவரும் சஞ்சிகை

## அறிமுக விழாவில் உரை

மண்டைதீவு, செப் 8

அண்ணமலைப்பல்கலைக் கழகப் படிப்பும் திருவண்ணமலை ஆதீன முதல்வர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பழக்கமும் புலவர் ஈழத்துச் சிவானந்தனுக்கு உரமாய் இருப்பதால் ஆலயமணி இதழ் சைவ மணம்பரப்பி சமய உலகில் ஒலிபரப்பும் என்பது சத்தியத்தில் சத்தியம்.

சித்தாந்த சரபம் வித்துவான் க. கணபதிப்பிள்ளை மண்டைதீவில் நடந்த ஆலயமணி சஞ்சிகை அறிமுக விழாவில் உரையாற்றும்போது இப்படிக் கூறினுர்.

மண்டைதீவுதிருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் மண்டைதீவு திருமுறைக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்த இவ்விழாவுக்கு ஓய்வுபெற்ற அதிபர் க. மாணிக்கலிங்கம் தலைமை வகித்தார்.

கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் பேசும்போது ''சமயத்திற்காக போராடவேண்டிய காலத்திலும் சமயத்தைப்பற்றிய தெளிவு கொடுக்க வேண்டிய நேரத்திலும் ஆலயமணி சஞ்சிகை வெளிவருவது மிகப் பொருத்தமே.

''எதையும் திறம்படப் பேசும் வல்லமையும் எழுதும் திறனும் எதையும் தாங்கும் இதயமும் பெற்றுள்ள புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆரம்பித்திருக்கும் இச்சஞ்சிகை புனித சேவைக்கால புரட்சிக் குரல் கொடுக்கும். புரட்சித் துறவியான குன்றக்குடி அடிகளாரின் பிரதம சீடரான புரட்சிப் புலவரின் இந்த முயற்சி மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் மிகப்பயனுள்ளதாகும்'' என்றுர்.

கம்பன் கழகத் தலைவர் திரு. தி. திருநந்தகுமார் பேசும் போது தேவையான நேரத்தில் சேவையாற்ற வந்திருக்கும் புலவரின் ஆலயமணி பள்ளிப் படிப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்புவரை செல்லும் மாணவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் சமுதாயப்பார்வை உள்ளவர்களுக்கும் உதவும் கேடயமாய் விளங்குகின்றது'' என்றுர்.

திரு என். இராமச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்த திருமுறைக் கழகத்தின் சார்பில் புலவருக்கு வாழ்த்துப்பாடி வழங்கப்பட்டது.

முதற்பிரதியை ஆலய அறங்காவலர் திரு. ச. இரத்தினசபாபதி வழங்கினுர்.

பதிலுரையை புலவர் ஈழத்துச் சிவானந்தனும் நன்றியுரையை கழகச் செயலாளர் என். விஜயசுந்தரமும் வழங்கினுர்கள். (இ)

## மானிப்பாய் சாயிசமித்தி இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், செப் 8

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் மானிப்பாய் சமித்தி, சாயி அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மானிப்பாய் ''ஸ்ரீன்ம ஹவுஸ்'' என்ற கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம் பெற்ற இந்த சமித்தி இவ்வளவு காலமும் கட்டுடையில் இயங்கி வந்தது.

புதிய கட்டடத்தில் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் மாலை 3-30 தொடக்கம் 5-15 வரை பூஜையும் பஜனையும் அதைத் தொடர்ந்து பிரசாதமும் தலைவர் உரையும் இடம் பெற்றன. (இ-சி)


# Keen Center

THIRUNELVELY

**SPECIAL**
SPOKEN ENGLISH
(WITH GRAMMAR)
BY
**MR. A. REGINALD**
(FOREIGN TRAINED)
NEW BATCH ON:
Time 4. 30 p.m 09. 09. 1988

(6329)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



**கீதாஞ்சலி வீ. கே. நல்லையா**
(பிரபலசங்கீத, நடன, ஆசிரியர், ஆசிரியமணி)

மலர்வு: 09 03 - 1912
உதிர்வு: 22 - 08 1987

திதி: அபரபக்ஷதிரயோதசி

வண்ணார்பண்ணை வடமேற்கு கேசாவில் முத்துவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவாக இருந்து அன்பும், பண்பும், அறமும் குடிகொண்ட என் இதய ஜோதியான எனது கணவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்:

திருமதி இராசம்மா.

28, துரைராசா வீதி,
வண் வடமேற்கு,
யாழ்ப்பாணம். (6163)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 - 09 - 1928

உதிர்வு: 22 - 08 - 1987

திதி: 08-09-1988

திருமதி
**யோகேஸ்வரி சுந்தரமூர்த்தி**

ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே அன்பின் திருவுருவாய், அறிவுச் சிகரமாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், வாழ்வின் நல்வழிகாட்டியாய் வாழ்ந்து, மறைந்து ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவு எங்களை விட்டுப்பிரியவில்லை. காலம் பூராவும் அந்நினைவுகள் எங்களை விட்டு நீங்காது.

அன்புப் பிரிவால் வாடும்,

அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

132/7, புறக்டோல் மாடிவீடு,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு 13 (6159)

## உனை இழந்து ஓராண்டு



மலர்வு: 20 - 0) - 1924

உதிர்வு: 08 0) - 1)87

**திருமதி கனகம்மா (ரி. எம். சீ) வைத்தீஸ்வரன்**

நெஞ்சில் நீங்கா நினைவுகளுடன்
அஞ்சலிகள்! ஆராதனைகள்!
பிள்ளைகள் மருமக்கள், பேர்த்திகள்.

''மிதிலை''
கொல்லங்கலட்டி வீதி,
தெல்லிப்பளை (6323)

# விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணி துரிதம்

மண்டைதீவு, செப். 8

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணிக்குரிய வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

இதற்குரிய விண்ணப்பங்கள் அவ்வப்பகுதி பயிர்செய்கை உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேஸ்ட உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலில் கிராமசேவை அலுவலகர் ஊடாக விண்ணப்பிக்கும் பாதிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (இ-88)

## 'அர்ச்சுனு' ஒரு நல்ல ஆசிரியன்; பாடசாலை அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 7

'அர்ச்சுனு' ஒரு நல்ல ஆசிரியன், சிறுவர்களின் அறிவை விரிவடையச் செய்யும் நல்ல நோக்குடன் வெளிவரும் இச்சஞ்சிகை இல்லமறை காயாக உள்ள ஆற்றல் மிக்க சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும். அவர்கள் ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு முன்னேற வழிவகுக்கும். மாணவர் ஓய்வு நேரத்தை வீணடிக்காது நல்ல பொழுது போக்கை வளர்த்து நல்லன எண்ணி, நல்லன செய்து பயிற்சிகள் மூலம் உயர்ச்சியடைய இச்சஞ்சிகை ஒரு வரப்பிரசாதமாகும்.

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதவித்தியாலய மாணவர் தேர்ச்சிச் சங்கக் கூட்டத்தில் பேசிய அதிபர் கா. கணேசதாசன் சிறுவர் சஞ்சிகையாகிய அர்ச்சுனுவை அறிமுகம் செய்யும் பொழுது மேற்கண்டவாறு பாராட்டிப் பேசினார்.

அர்ச்சுனுவின் பயனுள்ள இப்பணி தொடர வேண்டுமென மாணவர்கள் பலரும் உரையில் தெரிவித்தனர். (இ)

## அடகு வைத்தோர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 8

மக்கள் வங்கியில் அடகு வைத்தவர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

ஆனைப்பந்தி குருநாதசுவாமி கோவில் முன்பாக உள்ள நகை அடகு வைத்தோர் சங்கக்கட்டடத்தில் கூட்டம் நடைபெறும்.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட வட்டி சம்சந்தமான முடிவு பற்றி கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிகிறது. (இ-9)

## கட்டப்பிராய் கலைமணி சன சமூக நிலையத்தின் கரபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 8

கட்டப்பிராய் கலைமணி சன சமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ்மாவட்டரீதியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நடத்தவிருக்கிறது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பெயர், விலாசம் பங்குபற்றும் வீரர்களின் பெயர்கள் தேசிய அடையாளகார்ட் இலக்கம் ஆகியவற்றுடன் விண்ணப்பப்பணமாக 25 ரூபா அனுப்புமாறு கோரப்படுகின்றது.

தலைவர் கலைமணி சன சமூக நிலையம் கட்டப்பிராய் யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 12-9-88 திங்கட்கிழமைக்கிடையில் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பும்படி விளையாட்டுக் குழுத் தலைவர் திரு. ந. தர்மகுலசிங்கம் கேட்டுக் கொள்கிறார். (இ)

## மக்கள் முகம்

### தர்மகர்த்தா சபை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தர்மகர்த்தா சபை அண்மையில் கூடி பின்வரும் பணியாளர்களை தெரிவு செய்தது.

தலைவர் சு. சிவகுருநாதன் செயலாளர் ந. சிவசுப்பிரமணியம் பொருளாளர் த. சிதம்பரநடராசா உதவிப் பொருளாளர் பொ. காங்கேசு.

### பெரும்போக நெல்லுக்கான உரவகைகள்

பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான உரவகைகள் தொல்புரம் கமநல சேவை நிலையம், நல்லூர் சேவை கமநல நிலையம் ஆகியவற்றுக்கு வந்துள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை தொல்புரம் கமநல சேவை நிலையப் பெரும்போக உத்தியோகத்தர் திரு. இரா சேந்திரம் மேற்கொண்டிருக்கிறார். (இ-120)

### கோயிலில் திருட்டு

கொக்குவில்இந்துக்கல்லூரிக்கு அண்மையில் உள்ளபுதுக்கோவில் என அழைக்கப்படும் முருகன் கோவிலில், ஊரடங்கு நேரத்தில்பெறுமதி வாய்ந்த பல தங்க நகைகள், பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (இ-119)

### சாவகச்சேரி இந்துஇல்லபோட்டி

சாவகச்சேரி, செப் 8

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அதிபர் திரு. சி. குகதாசன் தலைமையில் நடைபெற்றன.

கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராசாவும் பாரியாரும் கலந்து கொண்டனர்.

மொத்த விளையாட்டுக்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற தாமோதரம் இல்லம் இவ்வாண்டுச் சாம்பியனானது.

பிரதம அதிதியின் பாரியார் திருமதி நவரத்தினராசா பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (இ-31)

## ஒரு வருட நினைவு தின ஆராதனை [7. 9. 1988]



அமரர்:
J.டொன் பொஸ்கோ ராஜசேகர்

தோற்றம்:- 27-5-62
மறைவு:- 7-9-87

கிறீஸ்த்துஎனக்குஜீவன் சாவு எனக்கு ஆதாயம் (பிலிப்பியர் 1:21)

பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனி-மார்கள்.

நவாலி. (6330)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 06 - 02 - 1916

மறைவு : 01 - 09 -1986

திதி: 03-09-1988

**திருமதி நாகேசுவரி ஆறுமுகம்**

நாட்கள் பல கடந்து சென்றாலும் உங்கள் பசுமை நினைவுகள் எமது நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சரவணை மேற்கு,
வேலணை.
(6019)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# செக்மேற்-3 இடம்பெற்றுவரும் முல்லைத்தீவின் இன்றைய நிலை

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதிகளில் நிலைகொண்டு இம்மாவட்டத்தில் பொதுத் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு வந்த இருவர் சிரமங்களுக்கு மத்தியில் வவுனியா வந்து சேர்ந்தனர். முல்லைத்தீவு நிலைமை குறித்து எமது வவுனியாச் செய்தியாளருக்கு அவர்கள் தெரிவித்த தகவல்களே இங்கே பிரசுரமாகி உள்ளன.

முல்லைத்தீவுப் பகுதியில் வாகன ஓட்டம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது, முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் உள்ள அவசர நோயாளிகளை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸைப் பயன்படுத்தக் கூட அனுமதி இல்லை. அரச உத்தியோகத்தர்கள், பொதுப்பணித் துறை ஊழியர்கள் நோயாளர்கள் எவருக்குமே படையினரால் ''பாஸ்'' வழங்கப்படவில்லை, பாஸ் பெறுவதற்காக விடுத்த கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நகரிலிருந்து புதுக்குடியிருப்பு பகுதிக்கு சைக்கிளிலும் கால்நடையாகவும் செல்வதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரம் தவிர்ந்த நேரத்தில் வெளியில் நடமாடுபவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது.

ஊரடங்கு தளர்த்தப்படும் அந்த 2 மணித்தியால நேரத்திலும் கூட முல்லைத்தீவு நகரக்கடைகள் ஒற்றைக் கதவிலேயே திறக்கப்படுகின்றன.

அச்சத்தோடு வருகின்ற சிலரும் அவசர அவசரமாக தமது உணவுத் தேவைக்கான பொருட்களைப் பெற்றுச் செல்கின்றனர்.

தேங்காய் ஒன்று 10 ரூபாவுக்கும் சீனி ஒரு கிலோ 25 ரூபாவுக்கும் அரிசி ஒரு கிலோ 12 ரூபா முதல் 15 ரூபாவுக்கும் விற்பனைசெய்யப்படுகின்றது. மண்ணெண்ணெய் இல்லை.

வாகனப்போக்குவரத்து இன்றி வெளிமாவட்டத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதனால்கடைவீதியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் உணவுப்பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளார்கள்.

### கீரையும் தேங்காயுமே உணவு

முல்லைத்தீவிலிருந்து நெடுங்கேணி செல்லும் வீதியில் சுமார் 4 மைல் தூரத்தில் உள்ள முள்ளியவளை தண்ணீரூற்று பகுதிகள் நகரப்பகுதியில் இருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

தண்ணீரூற்று, நித்திகைக்குளம் (நித்திக்காய்க்குளம்) ஆகிய வற்றைச் சூழவுள்ள அடர்ந்த காடுகளில் தேடுதலும் நேரடி மோதல்களும் ஷெல்லடிகளும் துப்பாக்கிப் பிரயோகங்களும் குண்டு வெடிப்புகளும் இடம்பெற்று வருகின்றன

தண்ணீரூற்று குமுழமுனை, ஆறுமுகத்தான் குளம், தண்ணிமுறிப்பு, செம்மலை, படலைக்கல்லு, நித்திகைக்குளம், புளியமுனை ஆகிய கிராமங்களும், பூதன்வயல், ஒத்தியா குளம், மதவளசிங்கன் குளம், 11 ஆம் கட்டை, முறிப்பு, இத்திமடு ஆகிய கிராமங்களும் இவற்றை அண்மித்துள்ள அடர்ந்த காடுகளும் சுற்றிவளைக்கப்பட்டு மோதல்கள் இடம் பெறுகின்றன.

இதேபோல நெடுங்கேணிக்கு கிழக்காக 4 மைல் தூரத்தில் உள்ள தண்டுவான் பகுதியை அண்டியுள்ள தட்டாமலை, [illegible] குடியேற்றத்திட்டம்), ஒதியமலை, [illegible] குளம், பண்டார குளம், பழம்பாசி ஆகிய கிராமங்களும் சுற்றிவளைக்கப்பட்டு காட்டுப்புறங்களில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

சுற்றிவளைக்கப்பட்ட கிராமங்களில் மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் இப்பகுதிகளில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

விவசாய முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்து பயிர்கள் நாசமடைந்துள்ளன. இதனால் இப்பகுதியில் உள்ள அன்றாடம் கூலித்தொழில் புரிவோரும் வறியமக்களும் முருங்கைக் கீரையையும் தேங்காயையுமே உணவாக உட்கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது

நோயாளிகள், மருந்து, வைத்தியகவனிப்பு இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள்

### பயணிகள் முல்லைத்தீவை அடைந்தனர்

முல்லைத்தீவில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவை அறியாமல் பயணம் செய்து முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி பகுதியில் தஞ்சமடைந்திருந்த பஸ் பயணிகள் அனைவரும் படையினரின் ''பாஸ்'' பெற்று முல்லைத்தீவைச் சென்றடைந்தார்கள்.

3 இ. போ. ச பஸ்களிலும் 2 மீன் லொறிகளிலும்வந்து தஞ்சமடைந்த பயணிகளுக்கு வித்தியானந்தா கல்லூரி அதிபர், பாடசாலையில் தஞ்சமளித்தார்.

சர்வோதயத்தினர் உணவுப் பொருட்களை வழங்கினார்கள். இவர்களதுசிரமங்களை உணர்ந்த அதிபர் திரு. இ. தங்கராஜா துணிவுடன் அருகில் உள்ள படை அதிகாரிகளைச் சந்தித்து பாஸ் பெற்றுக் கொடுத்து பயணிகளை முல்லைத்தீவுக்கு அனுப்பிவைத்தார்.

[illegible] முல்லைத்தீவிலிருந்து ஊர [illegible] அறியாமல் மீன் ஏற்றி வந்த மூன்று லொறிகளில் இருந்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான மீன்நிலத்தில் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, யாழ் சென்று திரும்பிய அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் ஊரடங்கு வாகனப் போக்குவரத்து தடை காரணமாக முல்லைத்தீவு செல்ல முடியாமல் வவுனிக்குளம் பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் விடுதியில் தங்கி இருந்தார்.

ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 40 பேர் முல்லைத்தீவு செல்லமுடியாத நிலையில் வவுனியாவில் உள்ள நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்தனர்.

முல்லைத்தீவு, குமுழமுனை, வட்டுவாள், முள்ளியவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் கடந்தமாதம் 8ஆம்திகதி தொடக்கம் மூன்று வாரங்களாகபொலநறுவ றோயல்கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியசேவை முன் பயிற்சிநெறியை முடித்துக்கொண்டு திரும்பி இருந்தனர்.


கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமையின் பின்னரே பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்புக்கு வாகனம் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒன்றிரண்டு வாகனங்களே, அதுவும் இந்த வீதியில் உள்ள தடைமுகாம் படைஅதிகாரிகளுக்கும் பழக்கப்பட்ட தட்டி வான்களே சேவையில் ஈடுபட்டன.

### செக்மேற்-3 தொடரும்

இப்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தீவிரமாகவும் உக்கிரமாகவும் இடம்பெற்று வரும் செக்மேற்-3 நடவடிக்கைகள் உடனடியாக முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. (இ-164)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரணமும்



**திருமதி சு. அன்னபூரணி அம்மாள்**

மலர்வு: 1901-05-07
உதிர்வு 1988-08-24

அன்னையின் பாசத்திற்கு எடுத்துக்காட்டாய் எங்களைப் பாசத்துடனும், பணிவுடனும் வளர்த்து ஆளாக்கிய அன்னைக்கு எமது மனப்பூர்வமான அஞ்சலி.

காலஞ்சென்ற வித்துவான் பண்டிதமணி திரு. ந. சுப்பையாபிள்ளை அவர்களின் அன்பு மனைவி அன்னபூரணி அம்மாளின் 16 ஆம் நாள் சபிண்டீகரணம் 8-9-88 வியாழன் காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் பங்கு பற்றுமாறு வேண்டுகிறோம்.

மக்கள்:
திருமதி இ. அமிர்தாம்பிகை
திருமதி ச. சரோஜினிதேவி
ந. சண்முகநாதன்-கமநலச் சேவை இலாகா பரந்தன்
S. K. இராமநாதன்-லிங்கன் பிரின்டேஸ், கொழும்பு
பேரப்பிள்ளைகள்.

465/1, K. K. S. ரோட்,
யாழ்ப்பாணம். (6167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

**பொருள்:**

பொருள் என்று சொல்லப்படுகின்ற நந்தா விளக்கு, நினைத்த இடத்திற்குச் சென்று உள்ள இடையூற்றைக் கெடுக்கும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 23073
08-09-1988 பெ. ஆ. 23

# போர்நிறுத்தமும் தேர்தலும்

ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. திடீரென நடைபெற்ற ஆளுங்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஒரு கட்டத்தில், ஜனாதிபதியும் அவரது சகாக்களும் கங்கணம் கட்டிக் கூறியது உண்டு.

ஆனால் இப்போது அந்த அக்கறை சற்றுக்குறைந்து, ஜனாதிபதி தேர்தலில் தான் அதிக கவனம் செலுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது நிற்க.

வடக்கு-கிழக்கில் நிலவும் இராணுவச் சூழ்நிலையை மறந்து, அதனால் தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை கருத்தில் எடுக்கத் தவறி —

தேர்தல் நடத்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் எதுவாயிருந்தாலும் என்ன, அனுபவிக்கப் போகிறவர்கள் தமிழர்கள் தானே என்ற பொடுபோக்குத் தனத்துடன்—

திரு. ஜெயவர்த்தன மாகாண சபைத் தேர்தலை நடத்த அவசரப்பட்டார்.

ஏழு சபைகளின் தேர்தல்களையும் வன்செயல்களின் மத்தியில், அச்சுறுத்தலின் மத்தியில் நடத்தியவன் தானே, வடக்கு-கிழக்குத் தேர்தலையும் நடத்தி எனது அதிகாரத் திறமையைக் காட்டினால் என்ன என்று அவர் வீம்புத் தனத்துடன் செயற்பட்டிருக்கலாம்.

இராணுவ அழுத்தத்துடன் கூடிய ஒரு தேர்தலை முடித்துவிட அவர் நினைத்ததில் வியப்பில்லை. ஏனெனில் கடந்த பல வருடங்களாக அவர் ஜனநாயகம் என்ற போர்வையுடன் மறைமுக இராணுவ ஆட்சி நடத்தி வருபவர் என்பதால், வடக்கு-கிழக்கில் இராணுவச் சூழ்நிலையில் ஒரு தேர்தலை நடத்துவது அவருக்குப் பெரிதாகத் தெரிய நியாயமில்லைத்தான்!

ஆனால் வடக்கு-கிழக்கில் இன்றைய சூழ்நிலையில் தேர்தல் நடத்துவது என்பது பெரும் குழப்பத்தை உண்டு பண்ணுவதாகவே அமையும். இந்தப் பிரதேசத்தில் முதலில் அமைதி தான் அவசியம்.

அந்த அமைதி ஏற்படுவதற்கு இந்தியப் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் மோதல் நிற்க வேண்டும். அதாவது யுத்த நிறுத்தம் வேண்டும்

ஆனால் ஒன்று. தேர்தலை நடத்துவதற்காகத் தான் யுத்த நிறுத்தம் என்றோ, தேர்தலை நடத்துவதற்காகத்தான் பேச்சுவார்த்தை என்றோ ஒரு நிலைப்பாடு இருத்தல் ஆகாது.

முதலில் இருபக்கமும் சம்மதித்து யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் பின்னர் இருதரப்பினரும்ஒருமித்து உத்தியோகபூர்வமாகப் பேசவேண்டும். அவற்றின் மூலம் பரஸ்பரம் புரிந்துணர்வு உண்டாக வேண்டும்; அதன் விளைவாக இயல்பான அமைதி திரும்ப வேண்டும்.

அந்த அமைதி வந்த பின்னர் தான் தேர்தலைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்.

அதை விட்டு இராணுவச் சூழ்நிலையில் தேர்தலைத் திணிப்பதோ —

அல்லது —

தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு அதற்காகப் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பதோ பொருந்தாது.

போர்நிறுத்தமும், பேச்சுவார்த்தையும் தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட விசேட விவகாரமாகக் கொள்ளப்பட்டுக் கையாளப்பட வேண்டும். தேர்தலை நடத்துவதற்காகச் செய்யப்படும் ஆயத்தமாக இருக்கக்கூடாது.

மாகாணசபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டு,போர்நிறுத்தத்தை அதற்குள் இணைந்த ஒரு நடவடிக்கையாக்க இந்திய அரசு திட்டமிட்டால் அது பொருந்தாது; எதிர்பார்க்கும் விளைவையும் தராது.

எனவே வடக்குக் கிழக்கில் அமைதியை உருவாக்குவது ஒரு விடயம், தேர்தலை நடத்துவது இன்னொரு விடயம் என்று பிரித்துக் காரியம் ஆற்றுவதே நல்லது.

## வயாவிளான் அச்சுவேலி வீதியின் மோசமான நிலை

வயாவிளானில் இருந்து அச்சுவேலி செல்லும் பாதை மிகவும்மோசமான நிலையில் இருந்து வருகிறது.

இது குறித்து வயாவிளான் பிரசைகள் குழுவும், அச்சுவேலிப் பிரசைகள் குழுவும் தனித்தனியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதம் அனுப்ப முடிவு செய்துள்ளன.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதிக்கு அடுத்தது வீதிப்போக்கு வரத்துக்கள் அதிகமாக உள்ள பாதை இது ஆகும்.

முதல் 2 முயற்சிகளில் தோல்வி கண்ட

# சோவியத் ரெக்கட் 'சோயுஸ் டி.எம். 6' 3வது முயற்சியிலேயே தரைஇறங்கியது!

## விண்வெளி வீரர்களுக்கு ஆபத்து இல்லை

மாஸ்கோ, செப் 7

கடந்தவாரம் மூன்று விண்வெளி வீரர்களுடன் அனுப்பப்பட்ட சோவியத் ரெக்கட் சோயுஸ் டி.எம். 6 மூன்றுவது முயற்சியிலேயே பூமியின் வளிமண்டலத்துக்குள் பிரவேசிக்க முடிந்தது.

பின்னர் சோவியத் மத்திய பிரதேசத்தில் தரை இறங்கியது. வீரர்கள் சுகமாக திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் இரண்டு முறை பிரவேசிக்க ரெக்கட் முயற்சித்தது. கம்பியூட்டர் கோளாறு காரணமாக அது முடியாமற்போய் விட்டது.

மூன்றுவது முயற்சியும் தோல்வியுற்றிருந்தால் அந்த ரெக்கட் வானவெளியிலேயே விண்வெளி வீரர்களுடன் அழிந்து போயிருந்திருக்கும் என்று சோவியத் யூனியன் அறிவித்தது.

மூன்றுவது முயற்சியை அந்த ரெக்கட் மேற்கொண்டபோது இரண்டு தினங்களுக்கு போதுமான உணவும் எரிபொருளுமே அதில் இருந்தது.

இந்த ரெக்கட் கடந்தவாரம் சோவியத் யூனியனில் உள்ள பைகானூர் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து அனுப்பப்பட்டது.

விளாடிமிர் லியோகோவ், டாக்டர் வேலரி பலியக்கோவ் ஆகியோருடன் ஆப்கன் வீரர் அப்துல் முகமது என்பவரும் ரெக்கட்டில் அனுப்பப்பட்டார்.

ஏற்கனவே வானவெளியில் சோவியத் அனுப்பிய 'மிர்' வானவெளி ஆராய்ச்சி நிலையம் கடந்த 9 மாதங்களாக பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையத்தில் தங்கி இருந்து விளாடிமிர் டிட்டோவ், மொனரோவ் ஆகியோர் ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

அவர்களுடன் சேர்ந்து ஆராய்ச்சிகளை நடத்தவே சோயுஸ் ரெக்கட்டில் இவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர்.

வானவெளியில் மனிதன் நீண்ட நாட்கள் தங்க முடியுமா? என்பதை அறியவே இந்தப் பரிசோதனை நடத்தப்படுகிறது. (எ)

வெளி உலகில்

## தமிழ்நாடு தேர்தல் ஜன. 8இல்?

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி நடக்கும் என்று தெரியவருகிறது.

அன்றைய தினம் ஒரே நாளில் வாக்குப்பதிவை நடத்தி முடிக்கவும் தேர்தல் கமிஷன் முடிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 3ஆம் வாரத்தில் சட்டசபைத் தேர்தலை நடத்த முன்னர் தேர்தல் கமிஷன் திட்டமிட்டிருந்தது. இது இப்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. [ஒ-எ]

பர்மாவில்

## அரசு ஆதரவாளர் கொலை; இதுவரை 24பேர் பலி!

ரங்கூன், செப். 7

பர்மாவில் அரசுஆதரவாளர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இது வரை 24 பேர் அரசு எதிர்ப்பாளர்களால் கொல்லப்பட்டனர்.

அவர்களில் 20 பேர் சழுத்துத்துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

இதனிடையில் இராணுவ சட்டா அதிபர் அரசுக்கு அவசரவேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

உடனடியாக அரசு பதவி விலக வேண்டும்; சொந்த லாபங்களுக்காக இராணுவம் பயன்படுத்தபடுவதை நிறுத்த வேண்டும்— இப்படி சட்டமா அதிமர் தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்

அதே வேளை விமானப் படையின் இன்னொரு பிரிவும் இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதற்காக தற்போதைய அரசு பதவிலக வேண்டும் என்று கோரியுள்ளது. (எ)

பதவி விலக

## ரங்கூன் அரசுக்கு காலக்கெடு; வேலைநிறுத்தத்துக்குத் அழைப்பு

ரங்கூன், செப். 7

ராஜினமாச் செய்துவிட்டு இடைக்கால அரசு ஏற்படுத்த பர்மா அரசுக்கு மாணவர் அமைப்புகள் காலக்கெடு வழங்கியிருக்கிறது

நேற்று புதன்கிழமை நள்ளிரவுக்கு முன்னர் மொராங் மொராங் அரசு பதவி விலகாவிட்டால் காலவரையறையற்ற பொது வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்று அரசு எதிர்ப்புக் குழுக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அரசு கவிழ்க்கப்பட்டு ஜனநாயகம் ஏற்படும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என அந்த அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

காலக்கெடு பற்றி ஆலோசனை நடத்துவதற்கு கால அவகாசத்தை அரசுத் தலைவர் மொங் மொங் கோரியிருந்தார்.

போராட்டத்தை மழுங்கடிக்கும் செயல் இது என்று கூறி, அரசுத்தலைவரின் வேண்டுகோளை எதிர்ப்பு அமைப்புக்கள் நிராகரித்து விட்டன. (எ)

## ஐ. நா. செயலாளருக்கு அமெரிக்கப் பெண் ஒருவரின் விண்ணப்பம்

கெய்ரோ, செப் 7

எகிப்துக் கணவனிடமிருந்து தனது குழந்தையைத் திருப்பி எடுத்து தரும்படி அமெரிக்கப் பெண் ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலரிடம் விண்ணப்பித்திருக்கிறார்.

நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயலும் பொதுச்செயலாளர் இதற்கும் தீர்வு காண வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்.

பெண்ணின் பெயர் பார்பாரா மெஸோ.

ஐ நா. தலைமை அலுவலகத்துக்கு முன்னால் அவர் சுலோக அட்டைகளைப் பிடித்த வண்ணம் சத்தியாக்கிரகம் செய்தார். (எ)

# விபீடணன் இராவணனை விட்டு உற்ற தருணத்தில் நீங்கியது குற்றமே

## வழக்காடு மன்றத்தில் தீர்ப்பு

காரைநகர், செப் 8

விபீடணன் இராவணனை விட்டு உற்ற தருணத்தில் நீங்கியது குற்றமே!

காரைநகரில் கடைசி நாள் கம்பன் விழா வழக்காடு மன்றத்தில் மேற்கூறிய தீர்ப்பு வழங்கப்பட்டது.

காரசாரமாக நடைபெற்ற இந்த வழக்காடு மன்றத்தில் நீதிபரசர்களாக கலாநிதி இ. பாலசுந்தரம் கலாநிதி வித்துவான் க. ந. வேலன பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆகியோர் கடமை ஆற்றினர்.

இறுதிநாள் கம்பன் விழா மங்கள இசையுடனும் மங்கள விளக்கேற்றலுடனும் ஆரம்பமானது.

மாலை நிகழ்ச்சிகளுக்கு தலைமையேற்று தலைமையுரை ஆற்றினர் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம்.

அவர் பேசுகையில்; கம்பன்விழா முத்தமிழ் விழா போன்று எமது ஈழப்போராட்டத்துடன் இணைந்ததாக அமைய வேண்டும் என்றார்.

எதிர்வரும் வருடம் இந்த விழா ஓர் அமைதியான சூழலில் இரவுநேர நிகழ்ச்சியாக பெரும் விழாவாக நிச்சயம் நடக்கும் இது உறுதி என அவர் கூறி முடித்தார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேசுகையில் காரைநகர் இப்போது ஓர் கம்பன் தீவாக மாறியுள்ளது. அதுமட்டுமல்ல கம்பராமாயணத்தை எதிர்த்த இந்திய திராவிடக் கழகம் இன்று மனம் மாறி கம்பன் விழாவை தொடங்கியுள்ளது என்றால் அதன் புகழ் என்ன என்பதை இப்போ எல்லோரும் அறிந்த விடயமாகும் என்றார்.

தொடக்கவுரை ஆற்றிய திரு நடேசன் சிவசண்முகமூர்த்தி இராவணனின் கடவுள்பக்தியை எடுத்துக் கூறினார்.

தலைமையுரையை பேராசிரியர் அ சண்முகதாஸ் வழங்கினார்.

அடுத்து 'நேசத்தால் நிறைந்தநெஞ்சம்' பற்றி திருமதி பத்மா சோமகாந்தன் பேசினார்.

இறுதியாக கவிபரங்கம் இடம் பெற்றது.

விழா நிகழ்ச்சிகள் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் சிவகுமாரின் நன்றியுரையுடன் நிறைவுற்றன. (இ-73)

## கொள்ளை போன நகைகள் வவுனியாபொலீஸாரால் மீட்பு

வவுனியா, செப் 8

அலகல்ல பாடசாலை அதிபரின், மனைவியிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட 13ஆயிரம் ரூபாபெறுமதியான தங்க நகைகளை வவுனியா பொலீஸார் மீட்டுள்ளார்கள்.

அபயசேகர (27), அனுரா (19) என்ற இரண்டுசந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிபரும் அவரது மனைவியும் பாடசாலை முடிந்து மோட்டார் சைக்கிளில் சென்றபோது துவக்கு முனையில் மறிக்கப்பட்டு தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

கொள்ளையடித்த நகைகளை வவுனியா நகரில் விற்க முயன்ற போதே சந்தேக நபர்கள் கையும் [illegible] பொலீஸார் தெரிவித்தனர். (இ-16)

## சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தால் 10லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு - அனுரா

கொழும்பு செப். 8

சுதந்திரக்கட்சி அரசு பதவிக்கு வந்த முதலாவது ஆண்டில் பத்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நடந்த கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

சுதந்திரக் கட்சிக்கு எதிராக ஜே வி பியினர் செயல்படுவர் என்று தவறாக எண்ணியே ஜே விபியின் மீதான தடையை அரசு நீக்கியது.

வெளிநாட்டாரின் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைப் பாதுகாக்கவே ஜே விபி போராடுகின்றது இதற்காக ஜே விபிக்கு எமது கட்சி நன்றி தெரிவிக்கின்றது.

சுதந்திரக் கட்சி அரசு மீண்டும் கியூ முறையைக் கொண்டு வராது.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

## ஆரோக்கிய மாதா நிறைவு விழா

காங்கேசன்துறை செப். 8

பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலய வருடாந்த உற்சவ நிறைவு விழா இன்று 8 ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்த ஆலயத்தில் கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றவைபவத்துடன் உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

வண. பீற்றர் துரை [illegible] வைப்பார். (இ-68)

## ஜனாதிபதி தேர்தலே முதலில்!

கொழும்பு செப் 8

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படி ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழு பெரும்பான்மையான வாக்குகளினால் தீர்மானித்தது.

கமிட்டிக் கூட்டத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தன அவசரமாக அழைத்து இது பற்றி ஆலோசனை கேட்டார். அப்போதே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-எ)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## காக்கும் கடம்பன்

செந்நெற் கழனிசூழ் செல்வஞ்சேர் நல்லூரில்
கந்தனிரு தேவியர்களின் நடுவே-வந்தினிது
சப்பரத்தில் இன்றேறித் தமிழர்க் கருள்சுரப்பான்
சுப்பிர மணியன்றன் சூடு!

★ ★ ★

செல்வர் வாழ் நல்லூரில் தேவசேனாதிபதி
சொல்லுயர் சப்பரத்தில் இன்றேறித்- தொல்லைகளைப்
போக்கி அருள்பொழிவான் போதகத்தை ஆக்கிடுவான்
காக்குங் கடம்பனவன் காண்!

-கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சப்பறத் திருவிழா]

## காரைநகரில் ஞாயிறன்று உண்ணாவிரதப் பிரார்த்தனை

காரைநகர், செப்,8

காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி முதல் மாலை 8மணி வரை உண்ணாவிரதப் பிரார்த்தனை நடைபெறுகிறது.

காரைநகர் பிரசைகள் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த உண்ணாவிரதப் பிரார்த்தனை பின்வரும் கோரிக்கைகளுக்காக நடத்தப்படுகிறது.

★ பூஸா முகாமில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்

★ தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்தஇடங்களில் தீவிரமாக நிகழும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

★ நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் முன்வரவேண்டும். (இ)

## மொட்டை அடிக்கப் பட்டனர்

பலாலி, செப் 8

ஏழாலை தெற்கிலும், அதன் சுற்றுடல் பகுதிகளிலும் திருட்டுச்சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படும் நால்வர் விடுதலைப்புலிகளால் மொட்டை அடிக்கப்பட்டுத்தகுந்த தண்டனை விதிக்கப்பட்டு இறுதி எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். (இ-119

## கண்டனம்

யாழ்ப்பாணம் செப் 8

லங்கா சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டதை வடபிரதேச தொழிற் சங்களின் கூட்டுக்கமிட்டி வன்மையாகக் கண்டித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* காஞ்சிபுர * பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

08 - 09 - 1988 வியாழக்கிழமை

* சேட்டிங்ஸ் * சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## WANTED

Wanted Immediately a Printing Works Supervisor for an established Firm dealing large volume of Printing works, with suitable qualification and experience in this filled,

C/o.
Uthayan 355

(C-142)

## ஆரம்ப ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட மேலும் 19 பேரின் விவரம்

பலாலி, செப். 8

ஆரம்ப ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட மேலும் 19 பேரின் பெயர், விவரங்கள் கல்விச் சேவை ஆணைக் குழுவினால் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர், விவரம் வருமாறு:—

செல்விகள் என். இராசலிங்கம் செல்வராணி (எழுதுமட்டுவாள்), எஸ். சிவபாலினி (மட்டுவில் தெற்கு), கே. இந்திராணி (கைதடி மத்தி), ந. பாலசத்யமணி (சரவணை மேற்கு).

என். ஆனந்தராணி (நெல்லியடி), ஏ. மகாலட்சுமி (புலோலி தெற்கு), ஐ. புஸ்பலதா (கோப்பாய் வடக்கு), ரீ. தவேஸ்வரி (மாதகல் கிழக்கு)

ஈ. புனிதகுமாரி (மீசாலை தெற்கு), எம். பி. கிறீஸ்சோஸ்தம் (கரம்பன் கெற்கு), செ. தமயந்தி (உடுவில்), டி. சுமதி (கோண்டாவில் மேற்கு), எம். பூமகள் (அராலி தெற்கு), எம். ரஞ்சிதமலர் (குடத்தனை கிழக்கு), ச. பிரேமலதா (கைதடி மேற்கு).

திருவாளர்கள் பீ. கெங்காதரன் (கரணவாய் வடக்கு), எஸ் யோகமனோகரன் (கொடிகாமம்), எஸ். தேவகுமார் (யாழ்ப்பாணம்), எஸ். சத்தியவான் (நெடுந்தீவு மேற்கு).

(ஓ-119-9)

## கூரையிலிருந்து விழுந்து மரணம்

வீட்டுக் கூரையின் மேலிருந்து தச்சுவேலை செய்து கொண்டிருந்த ஒருவர் தவறி விழுந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று நாயன்மார்கட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச்சம்பவத்தில் மரணமானவர் கே. செல்வநாதன் [வயது45] என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

மரண விசாரணையில் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஓ-9)

## 3,500 புடைவைப் பார்சல்கள்

யாழ்ப்பாணம், செப் 8

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொழும்புச் செஞ்சிலுவைச் சங்கதலைமைக் காரியாலயத்தினூடாக 3,500 புடைவைப் பார்சல்களை வழங்கி உள்ளனர்.

யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரிஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வாரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்திருந்தது.

இந்தக் குழுவில் நோர்வேசெஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்டுள்ளபுடைவைப்பார்சல்ஒவ்வொன்றும் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டது.

படுக்கை விரிப்பு, துவாய், சாரம், ரீசேட், துணி என்பன இவற்றில் அடங்கும்.

இந்தப் பார்சல்களை கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காணமற்போனவர்களின் குடும்பங்களுக்கு வழங்குவதுபற்றி ஆராயப்பட்டு வருகின்றது. (ஓ-5)

## முடிவுற்றது

யாழ்ப்பாணம். செப் 8

பூஸா முகாமில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் இருந்து வந்த இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இடை நிறுத்தப்பட்டது.

நல்லூர் - வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் நேற்றுடன் 13 நாட்களாக இந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

பூஸா கைதிகளும் தங்களது சாகும்வரையான உண்ணாவிரத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (ஓ-9-10)

## அகதிகள்.....

கல்லூரியில் தமது அடையாளக் கார்ட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அடையாளக் கார்ட்டுகளைப் பெற வருபவர்கள் இந்திய அரசினால் வழங்கப்பட்ட பதிவு அட்டையையும் தம்முடன் எடுத்து வரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-10-9)

## சுயாட்சி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள். மாவட்ட சபைகளுக்கு கணிசமான சுயாட்சித்தன்மையுள்ள அதிகாரங்களை வழங்கி இருந்தால் அன்றே பிரச்சினை தீர்ந்திருக்கும். அதை ஏற்க தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இருந்தது.

ஆனால் அரசு தன் வாக்குறுதியைப் பறக்க விட்டுவிட்டது. இதனால் கூட்டணி மக்கள் நம்பிக்கையை இழந்து, விடுதலைப் புலிகள் செல்வாக்கு அதிகரித்தது. ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சில கழுகுகள் தமிழர்களுக்கு சலுகைகள் வழங்குவதையும் விரும்புவதில்லை – என்று கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் "தெற்கில் உள்ள ஜனதா விமுக்திப் பெரமுனை தீவிரவாதிகளுடனும் பேசி சமரசம் செய்து வைக்கவும் தயார். இந்தியாவுடன் நாம் நட்புடன் இருக்க வேண்டும்' இருந்தே ஆக வேண்டும்" என்று கூறியுள்ளார்.

## வடக்கு, கிழக்கில்-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துவதற்காகஇந்திய வல்லரசுடனான போரை நிறுத்தி தேர்தலில்பங்கு பெறுவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முன்வர வேண்டும் என்றுவேண்டுகோள் விடுகின்றேன்.

இந்திய அமைதிப்படையுடனான இந்த மோதலில் பொதுமக்களே பெருமளவில் தமதுஉயிர்களைப் பலி கொடுக்கின்றார்கள். மேலும் இந்தப் போரில் விடுதலைப் புலிகள் இந்தியாவைத் தோற்கடிக்க முடியாது.

எனவே தேர்தலில் பங்கு கொண்டு தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க ஒரு வாய்ப்பை அளிப்பதன் மூலம், அந்த பிரதிநிதிகளின் ஊடாக எமது கோரிக்கைகளை வென்றெடுக்கதிரு.பிரபாகரன் ஒரு வாய்ப்பளிக்க முன்வரவேண்டும்.

### இந்திய - இலங்கை அரசுகளுக்கான வேண்டுகோள்

வெறும் சுயகௌரவத்திற்காக வடகிழக்கில் தேர்தலை நடத்துவதற்கு இந்திய, இலங்கை அரசுகள் முற்படக் கூடாது. இப்போதுள்ள பதற்ற நிலையைமாற்றி, அமைதியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திய பின்னரே தேர்தலை நடத்தவேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை இரு அரசுகளும் செய்யவேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்குவோம்.

இப்படி அவர் தெரிவித்தார். (ஓ-161)

## பண்டத்தரிப்பில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன.

எனினும் சில மணி நேரத்தின் பின் இந்தியப்படையினர் சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டனர்.

இதன் காரணமாக பண்டத்தரிப்புப் பகுதிக்குள் இருந்து எவரும் வெளியே செல்லவோ, அங்கு உட்பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

சுமார் நான்கு மணி நேரத்தின்பின் இப்பகுதியூடாக போக்குவரத்துக்களை மேற்கொள்ள படையினர் அனுமதி வழங்கினர்.

(ஓ-10)

## ஜே. வி. பி......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயப்படுகின்றார்கள். அங்கும் இல்லை; இங்கும் இல்லை. எங்கு தங்குவது என்பதே பெரிய பிரச்சினையாக உள்ளது— இப்படித் திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

(ஓ-உ-எ-)

## நாட்டின்.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ப்பு விடுத்திருந்தது

வீரக்கெட்டியாவில் நடந்த சட்டத்தரணி லியனாராச்சியின் ஈமக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக ஏழு பஸ்களில் கொழும்பில் இருந்து பிரபல சட்டத்தரணிகள் சென்றனர்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற விருந்தஈமக்கிரியைகளில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கலந்து கொள்ள இருந்தார். (ஓ-உ-எ)

## பாதிக்கப்பட்ட...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போக அறுவடை செய்யவிருந்த விவசாயிகள் பெரும் துன்பம் அனுபவித்து வருகின்றனர். முல்லைத்தீவில் பிரயாணம் முற்றாக துண்டிக்கப்பட்டதால் பிரயாணிகள் கடுமையான நோயாளிகள் மற்றும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் இப்பகுதி மக்கள் உள்ளனர்.

இங்குள்ள 3,000 க்கு மேற்பட்ட அகதிகள் உணவின்றி வாடுகின்றார்கள். வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 1,500 குடும்பங்களுக்கு மேல் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள்.

இத்தகைய செயல்களை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். ஏற்கனவே ஸ்ரீலங்கா இராணுவத்தால் இப்பகுதி மக்கள் பல கொடுமைகளை அனுபவித்துள்ளனர். இத்தகைய நிலையில் இந்திய இராணுவமும் தேடியழிக்கும் நடவடிக்கையை நிறுத்தி மக்கள் இயல்பான வாழ்க்கையில் தலையிடுவதை நிறுத்தவேண்டும் எனக் கோரிக்கைவிடுக்கிறோம்-என்று கூறப்பட்டுள்ளது. (ஓ)

## விவரம்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பிரிவுகளிலேயே கண்டிப்பாக நியமிக்கப்படுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-119-9)

## தியாகி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உள்ளது.

அதேவேளை திலீபனின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட இருக்கும் மணிமண்டபம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவமும், திலீபனின் வீதி பெயர்ப்பலகை திறப்பு விழாவும் அன்றைய தினம் நடைபெறவுள்ளதாக ஊரெழு பிரசைகள் குழுச் செயலாளர் திரு. கே. சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஓ-10)

## இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

யாழ் நகரில் முதல் முதலாக
எமது நிறுவனமாகிய,
MEERA TRAVEL'S
K. K. S. வீதி, சுன்னாகம்.

இச் சலுகை முறையை அறிவிக்கின்றோம்

* எம்மிடம் கடவுச்சீட்டு (Passport) பெற்றுக்கொள்ள பதிவு செய்பவர்களுக்கு கீழ்க் கண்டவை இலவசமாக வழங்குகின்றோம்,

(1) விண்ணப்பப்படிவம். (Passport Form)
(2) பதிவுக்குரிய முத்திரை (ரூபா. 200/- பெறுமதி)
(3) Passport Size படம் இலவசமாக எடுத்துக் கொடுக்கப்படும்.
(4) Passport பழுதடையாமல் போடப்படும் பிளாஸ்டிக்கவர்.

* இந்தியா விசா (3 மாத காலம்)
* வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்பவர்களும்/ இடம் பெயர்ந்து செல்பவர்களும் எம்மிடம் பதிவு செய்தால் கடவுச்சீட்டு (Passport) இலவசமாகச் செய்து தரப்படும்.
* குறைந்த செலவில், விரைவில் உங்கள் பிரயாண ஒழுங்குகளைச் செய்து முடிக்க எம்மை நாடவும்.

விபரங்களுக்கு:-
**கிருபா வீடியோ சென்ரர்**
K. K. S. வீதி, சுன்னாகம்.
(C/ 135)

## உடன் தொடர்பு கொள்ளவும்

கீழ்காணும் பெயர்களை உடையவர்களின் குவைற் விசா என்னிடம் உள்ளது.

| | |
|---|---|
| K. மகாலிங்கம் | — H 0452930 |
| K. T. நாகேஸ்வரன் | — J 0069367 |
| K. S. சத்தியராஜா | — H 0130971 |
| S. புஸ்பராஜா | — J 0272475 |
| A. சிவநாதன் | — J 0242728 |
| S. S சிவக்குமார் | — H 0231881 |
| K. M. சிறிபாலன் | — H 0057586 |
| S. சிவலிங்கம் | — F 321904 |
| V. P. குலசேகரம் | — H 0322207 |
| V. V. சந்திரசேகரம் | — H 0051063 |
| R. நாகரட்ணசிங்கம் | — H 0166494 |
| N. உதயராஜா | — H 0480645 |
| A. செல்வச்சந்திரன் | — J 0118253 |
| K. சிவராஜா | — H 0340885 |
| K. K. வசந்தராஜன் | — J 0342893 |
| K. பிறேமதாஸ் | — H 279950 |
| R. R. விஜயகுமார் | — J 0341448 |
| M. M. சின்னராஜா | — J 0401625 |
| E. R. பொன்னையா | — H 0401363 |
| M. K. மகேந்திரன் | — G 0473437 |
| A. சுந்தரம்-இந்திரா | — H 0090994 |

மேலும் உடனடியாகத் தேவை

**குவைற்**

| | |
|---|---|
| கிளீனேர்ஸ் | — 35 KD |
| மேசன் (கூலியாட்கள்) | — 50 KD |
| பணிப்பெண்கள் | — 30 KD |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**N. சுரேந்திரன்**
( சுரேன் )
**நவாலி கிழக்கு, மானிப்பாய்.**
(ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலுக்கு அண்மையில்)
(6142)

## அறிவித்தல்

27 – 06 – 88 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம். திரு. க. குமாரசாமி அவர்கள் மூளாய் சித்தி விநாயகர் – முத்துக் குமாரசாமி ஆலயங்களுக்கான, தேர்த்திருப்பணிப் பொதுச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்பதை அறியத் தருகிறோம்.

தேர்த்திருப்பணிச் சபையினர்

மூளாய்
05 - 09 - 88

(6176)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 89, 90**
**கலை, வர்த்தகம்**
**பிரிவு 3**

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| அளவையியல்: | S. S. மனோகரன் |
| வர்த்தகம்:- | ரட்ணம் |
| தமிழ்:- | செல்வி மீரர |
| இந்து நாகரிகம்:- | ஜோதீஸ்வரன் |
| புவியியல்:- | இக்னேசியஸ் |
| அரசியல்:- | சுந்தரமூர்த்தி |

ஆரம்பம்: 10.9.1988
சனி 9.00 A.M.

**பொருளியல் A/L 89**
**புதிய பிரிவு- தேசியவருமானம்**
சனி 10.9.1988 1.00 P. M

( /105)

# மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு காசிப்பிள்ளை

திருநெல்வேலி வடக்கு வாசியும், திருநெல்வேலி இந்து கலவன் பாடசாலை, முத்துத்தம்பி மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியருமான கார்த்திகேசு காசிப்பிள்ளை அவர்கள் 7-9-88 நண்பகல் அமரத்துவம் அடைந்தார். அவரின் ஈமக்கிரியைகள் 8-9-88 வியாழக்கிழமை (இன்று) நண்பகல் 12-00 மணியளவில் திருநெல்வேலி வடக்கில் உள்ள அவரின் சகோதரர் அமரர் கா. அருளம்பலத்தின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல் :
**கா. தம்பிப்பிள்ளை**
ஓய்வுபெற்ற ஆசிரியர்,
கோப்பாய் வடக்கு.

(6178)

### திரு. ஆறுமுகம் சின்னப்பா

[வைத்தியர்]

திரு. ஆறுமுகம் சின்னப்பா வைத்தியர் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற அன்னபூரணத்தின் கணவரும், செல்வரத்தினம் (மாவட்ட அமைச்சு, முல்லைத்தீவு) அவர்களின் தந்தையும், சற்குணதேவியின் மாமனாரும், காவேரியின் பாட்டனாரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 31, ஆடியபாதம் வீதி, நல்லூர் இல்லத்தில் 8-9-88 வியாழக்கிழமை (இன்று) முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(6173)

### திரு. அப்புத்துரை சாந்தலிங்கம்

உரும்பிராயை பிறப்பிடமாக கொண்ட அப்புத்துரை சாந்தலிங்கம் அவர்கள் 6. 9. 1988 அன்று காலமாகிவிட்டார். இவர் அப்புத்துரை தம்பதிகளின் அன்பு மகனும், அருந்தவமணியின் அன்புக் கணவரும், சிவக்குமார் (ஜேர்மனி), சசிகலா, திருக்குமாரன், செல்வகுமார், சாந்தகுமார், ஜெயசீலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், வடிவேல் (குவைத்) வசந்தி, நகுலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், சஜனி, துசி, பிரசாத், நிருந்தனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் இராசையா, இராசரத்தினம், ஆகியோரின் சகோதரரும், சந்தசாமி, காலஞ்சென்ற இரத்தினசபாபதி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சோமசுந்தரம், காலஞ்சென்ற சண்முகநாதனின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 7. 9. 1988 ல் நவாலியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **சா. செல்வக்குமார்**
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(6174)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08 09 - 1988 அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Thursday 8th September 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org